மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை :- **திருமதி. சி. கலைவாணி**, B.A., L.L.B.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2052 ஸ்ரீ பிலவ வருடம் சித்திரைத் திங்கள் 8 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 32/2021 -ல்**

**அசல் வழக்கு எண். 13/2019**

1. மன்னார்குடி டி.மு.இலாகா, மன்னார்குடி தாலுக்கா, சவளக்காரன் கிராமத்தில் மேலத்தெருவில் வசித்து வரும் கோவிந்தசாமி மகன், இந்து, விவசாயம், 81 வயதுள்ள ஜோதி
2. மன்னார்குடி டி.மு.இலாகா, மன்னார்குடி தாலுக்கா, சவளக்காரன் கிராமத்தில் மேலத்தெருவில் வசித்து வரும் ஜோதி மகன், இந்து, விவசாயம், 56 வயதுள்ள ராஜசேகர்

...மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

**// எதிர்//**

மன்னார்குடி டி.மு.இலாகா, மன்னார்குடி டவுன், கீழ பத்தமசாலவர் தெருவில் வசித்து வரும் கோவிந்தராஜ் மனைவி, இந்து, சிவமதம், 36 வயதுள்ள ராஜசெல்வி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் காலத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யாததை மன்னித்து இம்மனுவுடன் மனுதாரர் தரப்பில் தாக்கல்செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 8 விதி 1A(3) -ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு தாக்கல் ஆன நாள் :- 21.01.2021

இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் :- 25.01.2021

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு 16.04.2021 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V. ரவிச்சந்திரன் அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S.சம்பத்குமார், திருமதி.S.விஜி, செல்வி. S. மேகலா ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று

இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்பாணை உத்தரவு**

01. இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் உண்மை தன்மை, நம்பகத்தன்மை மற்றும் ஏற்கும் தன்மைக்கு உட்பட்டு இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை

2021ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

S/d. C. Kalaivani.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.